# பத்திரிக்கை செய்தி

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் மாவட்ட மகளிர் அதிகார மையங்களில், ஒன்றிய அரசின் திட்டங்கள் திறன்பட செயல்படுவதையும் திட்டங்களுக்கான பயனாளிகள் (ம) திட்டபலன்கள் கண்காணிக்கவும் மத்திய மாநில் திட்டங்கள் பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பெண்களின் ஒருங்கிணைப்பு மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் ஒழிவிடமாக உள்ள 1 தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்திற்கு, தகுதியுள்ள நபர்கள் தன்விவர குறிப்பு மற்றும் சான்று நகல்களுடன் வரும் 28.07.2025 க்குள் கீழ்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கலாம் என மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

<u>தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்திற்கான தகுதிகள்:</u>

1. விண்ணப்பதாரர் 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்
2. ஏதேனும் துறையில் பட்டப்படிப்பு பெற்றவராக இருத்தல் வேண்டும்
3. கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் மூன்று வருட பணி அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்(தரவு மேலாண்மை, செயல்முறை ஆவணப்படுத்தல், இணையதள அடிப்படையிலான அறிக்கைகள்)
4. மாநில அல்லது மாவட்ட அளவிலான அரசு அல்லது அரசு சாரா நிறுவனங்கள்/தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் பணிபுரிந்தவராக இருத்தல் வேண்டும்.
5. தமிழில் தட்டச்சு தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

## விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

மாவட்ட சமூகநல அலுவலர்,
மாவட்ட சமூகநல அலுவலகம்,
மூன்றாம் தளம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக புதியகட்டிட வளாகம்,
மதுரை மாவட்டம்.